Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

**Madurai Mani** Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamalaiyar Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 316 | உள்ளூர் - 16.11.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 316 | வெளியூர் - 17.11.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**சர்ச்சைக்குள்ளாகும் அறநிலையத்துறை நிகழ்வுகள்?**

**நேஷனல் இன்சூரன்ஸ் / எஸ்.பி.ஐ. 277 காலியிடங்கள்!**

**சிறப்பு 'டெட்' தேர்வு: அரிவுறுத்தல்கள்!**

**மதுரை நகைக்கடை கொள்ளை: குற்றவாளி கைது!**

## 'க்வாட்': மோடி-டிரம்ப் சந்திப்பு இல்லை?

புதுடெல்லி, நவ 16–

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய 'க்வாட்' நாடுகளின் தலைவர்கள், ஆசியான் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நாளை மணிலாவில் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



11 நாடுகள் அங்கம் வகிக்கும் 'ஆசியான்' கூட்டமைப்பின் உச்சிமாநாடு இந்தோனேசியாவின் மணிலாவில் நாளை நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்காக பிரதமர் நரேந்திர மோடி இன்று மாலை மணிலாவுக்குப் புறப்படவுள்ளார்.

இந்த நிலையில், மணிலாவில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய 'க்வாட்' நாடுகளின் தலைவர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தகவல்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனீசி மற்றும் ஜப்பான் பிரதமர் சனே தகைச்சி உள்ளிட்டோர் சந்தித்துப் பேசவுள்ளதாக கூறப்படுகிறது.

சீனாவின் ஷென்சென் நகரில் வரும் வியாழக்கிழமை சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் ஆகியோருடன் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முத்தரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு முன்னதாக 'க்வாட்' தலைவர்களை சந்திக்கவிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இதனிடையே, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் – பிரதமர் நரேந்திர மோடி இடையே இருதரப்பு சந்திப்பு நடைபெற வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் புளோரிடாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி20 உச்சி மாநாட்டின்போது பிரதமர் மோடியும் அதிபர் டிரம்ப்பும் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட வாய்ப்புள்ளது.

அமெரிக்க இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் படுதோல்விக்குப் பிறகு அடுத்தடுத்து உலகத் தலைவர்களுடன் அதிபர் டிரம்ப்பின் சந்திப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேசிய பத்திரிகை நாளை முன்னிட்டு முதல்வர் விஜய் வாழ்த்து!

சென்னை, நவ. 16–

தேசிய பத்திரிகை நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு:–




இந்தியப் பத்திரிகை கவுன்சில் செயல்படத் தொட ங்கியதை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் தேசிய பத்திரிகை நாளாகக் கொண்டாடப்படும் இந்நாளில், அனைத்து பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் பத்திரிகைத் துறை யானது, சமூகப் பிரச்சினை களை வெளிக்கொணர்ந்து, மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதோடு மக்களாட்சியின் மாண்புகளைக் காக்கும் பணிகளையும் செம்மையாக மேற்கொண்டு வருகிறது. உண்மை, நேர்மை, நடுநிலை, நம்பகத்தன்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட்டுவரும் பத்திரிகையா ளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் என்றும் துணை நிற்போம்!

## ஈரான்-அமெரிக்கா: மீண்டும் போர்!

வாஷிங்டன், நவ. 16–

பஹ்ரைனில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, ஈரானின் பந்தர் லெங்கே, சிரிக் பகுதிகளில் உள்ள ஏவுகணைத் தளங்களை அமெரிக்கா தாக்கியதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன. இதனிடையே, 'தியோடர் ரூஸ்வெல்ட்' விமானம் தாங்கிப் போர்க்கப்பலும் மத்திய கிழக்கிற்கு வந்துள்ளதாகவும், அப்பகுதியில் அமெரிக்காவின் விமானம் தாங்கிக் கப்பல்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது.




ஈரான் பதிலடி நடத்தலாம் என்ற அச்சத்தால் பதற்றம் அதிகரித்துள்ளது. அமெரிக்காவின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து உறுதியான முடிவு வெளியாகாத நிலை யில், மோதல் தீவிரமானால் உலகப் பொருளாதாரம், பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்களில் தாக்கம் ஏற்படக்கூடும் எனக் கவலை எழுந்துள்ளது.








## அதி தீவிரமாகும் அக்வான்!

# ஆந்திரக் கரையை நோக்கிப் புயல்! 145 கி.மீ. வரை சுழன்றடிக்கலாம் காற்று!

## நவம்பர் 20 நண்பகல் கரையைக் கடக்க வாய்ப்பு!!

சென்னை, நவ. 16–

வங்கக் கடலில் நவம்பர் 16ஆம் தேதி நவம்பர் 20ஆம் தேதிமாலை உருவாகவிருக்கும் அக்வான் புயல், சென்னைக்கு அருகே கரையைக் கடக்காது, இதனால், சென்னைக்கு எதிர்பார்த்த அளவுக்கு மழை வாய்ப்பும் இல்லை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.



அதாவது, அக்வான் புயல், மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 20ஆம் தேதி நண்பகலில், ஆந்திர மாநிலம் நெல்லூர் – துனி என்றப் பகுதிக்கு இடையே ஏனாம் கடற்கரைக்கு அருகே அதி தீவிர புயலாக கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகவிருக்கும் அக்வான் என பெயர் சூட்டப்படவிருக்கும் புயல் சின்னம், எங்கே? எப்போது? கரையைக் கடக்கும் என்பதை இந்திய வானிலை ஆய்வு மையம் தற்போது உறுதி செய்திருக்கிறது.

சென்னைக்கு அருகே கரையைக் கடக்கும், இல்லை ஆந்திரத்துக்குச் செல்கிறது என்று இரண்டு நாள்களுக்கும் மேலாக போக்குக்காட்டி வந்த புயல் சின்னம், சென்னைக்கு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது, தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வடக்கு – வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இன்று (நவம்பர் 16) காலை 08:30 மணி நிலவரப்படி, புயல் சின்னம் அதே பகுதியில், அதாவது 11.2° வடக்கு அட்சரேகை மற்றும் 86.4° கிழக்கு தீர்க்கரேகைக்கு அருகில் மையம் கொண்டுள்ளது. இது திரிகோண மலைக்கு (இலங்கை) கிழக்கே–வடகிழக்கே சுமார் 630 கி.மீ தொலைவிலும், ஸ்ரீ விஜய புரத்திற்கு (அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்) மேற்கே 690 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு (தமிழ்நாடு) கிழக்கே–தென்கிழக்கே 700 கி.மீ தொலைவிலும், விசாகப்பட்டினத்திற்கு (ஆந்திரப் பிரதேசம்) தெற்கே–தென்கிழக்கே 800 கி.மீ தொலைவிலும், கோபால்பூருக்கு (ஒடிசா) தெற்கே 910 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.புயல் சின்னமானது தொடர்ந்து வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (நவம்பர் 16) மாலை தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'புயலாக' (Cyclonic Storm) வலுப்பெறக்கூடும்.

மேலும், நவம்பர் 17ஆம் தேதி மாலையில், இது மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'தீவிர புயலாக' (Severe Cyclonic Storm) வலுவடைய வாய்ப்புள்ளது. அதன் பிறகு, இது மேலும் வலுவடைந்து, மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 20ஆம் தேதி மதியம், ஆந்திர மாநிலம் நெல்லூர் மற்றும் துனி பகுதிக்கு இடையே ஏனாம் கடற்கரைக்கு அருகே அதி தீவிர புயலாக கரையைக் கடக்கக்கூடும். அப்போது காற்றின் வேகம் மணிக்கு 120–130 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 145 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

ஒருபக்கம், சென்னைக்கு புயல் இல்லை என்பது ஆறுதலை அளித்தாலும், போதிய மழை கிடைக்காவிட்டால், கோடைக்காலத்தில் வரும் தண்ணீர் பஞ்சம், அடுத்த ஒரு சில மாதங்களிலேயே தொடங்கிவிடுமே என்ற அச்சம் நிலவி வருகிறது.வங்கக் கடலில் இன்று மாலை உருவாகவிருக்கும் அக்வான் புயல், சென்னைக்கு அருகே கரையைக் கடக்காது, இதனால், சென்னைக்கு எதிர்பார்த்த அளவுக்கு மழை வாய்ப்பும் இல்லை என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது, அக்வான் புயல், மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 20ஆம் தேதி நண்பகலில், ஆந்திர மாநிலம் நெல்லூர் – துனி என்றப் பகுதிக்கு இடையே ஏனாம் கடற்கரைக்கு அருகே அதி தீவிர புயலாக கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகவிருக்கும் அக்வான் என பெயர் சூட்டப்படவிருக்கும் புயல் சின்னம், எங்கே? எப்போது? கரையைக் கடக்கும் என்பதை இந்திய வானிலை ஆய்வு மையம் தற்போது உறுதி செய்திருக்கிறது.

சென்னைக்கு அருகே கரையைக் கடக்கும், இல்லை ஆந்திரத்துக்குச் செல்கிறது என்று இரண்டு நாள்களுக்கும் மேலாக போக்குக்காட்டி வந்த புயல் சின்னம், சென்னைக்கு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது, தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வடக்கு – வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இன்று (நவம்பர் 16) காலை 08:30 மணி நிலவரப்படி, புயல் சின்னம் அதே பகுதியில், அதாவது 11.2° வடக்கு அட்சரேகை மற்றும் 86.4° கிழக்கு தீர்க்கரேகைக்கு அருகில் மையம் கொண்டுள்ளது. இது திரிகோண மலைக்கு (இலங்கை) கிழக்கே–வடகிழக்கே சுமார் 630 கி.மீ தொலைவிலும், ஸ்ரீ விஜய புரத்திற்கு (அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்) மேற்கே 690 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு (தமிழ்நாடு) கிழக்கே–தென்கிழக்கே 700 கி.மீ தொலைவிலும், விசாகப்பட்டினத்திற்கு (ஆந்திரப் பிரதேசம்) தெற்கே–தென்கிழக்கே 800 கி.மீ தொலைவிலும், கோபால்பூருக்கு (ஒடிசா) தெற்கே 910 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.புயல் சின்னமானது தொடர்ந்து வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (நவம்பர் 16) மாலை தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'புயலாக' (Cyclonic Storm) வலுப்பெறக்கூடும்.

மேலும், நவம்பர் 17ஆம் தேதி மாலையில், இது மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'தீவிர புயலாக' (Severe Cyclonic Storm) வலுவடைய வாய்ப்புள்ளது.

அதன் பிறகு, இது மேலும் வலுவடைந்து, மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 20ஆம் தேதி மதியம், ஆந்திர மாநிலம் நெல்லூர் மற்றும் துனி பகுதிக்கு இடையே ஏனாம் கடற்கரைக்கு அருகே அதி தீவிர புயலாக கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் உருவாகவிருக்கும் அக்வான் என பெயர் சூட்டப்படவிருக்கும் புயல் சின்னம், எங்கே? எப்போது? கரையைக் கடக்கும் என்பதை இந்திய வானிலை ஆய்வு மையம் தற்போது உறுதி செய்திருக்கிறது.

சென்னைக்கு அருகே கரையைக் கடக்கும், இல்லை ஆந்திரத்துக்குச் செல்கிறது என்று இரண்டு நாள்களுக்கும் மேலாக போக்குக்காட்டி வந்த புயல் சின்னம், சென்னைக்கு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது, தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 6 கி.மீ வேகத்தில் வடக்கு – வடமேற்கு திசையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இன்று (நவம்பர் 16) காலை 08:30 மணி நிலவரப்படி, புயல் சின்னம் அதே பகுதியில், அதாவது 11.2° வடக்கு அட்சரேகை மற்றும் 86.4° கிழக்கு தீர்க்கரேகைக்கு அருகில் மையம் கொண்டுள்ளது. இது திரிகோண மலைக்கு (இலங்கை) கிழக்கே–வடகிழக்கே சுமார் 630 கி.மீ தொலைவிலும், ஸ்ரீ விஜய புரத்திற்கு (அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்) மேற்கே 690 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு (தமிழ்நாடு) கிழக்கே–தென்கிழக்கே 700 கி.மீ தொலைவிலும், விசாகப்பட்டினத்திற்கு (ஆந்திரப் பிரதேசம்) தெற்கே–தென்கிழக்கே 800 கி.மீ தொலைவிலும், கோபால்பூருக்கு (ஒடிசா) தெற்கே 910 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.புயல் சின்னமானது தொடர்ந்து வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (நவம்பர் 16) மாலை தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'புயலாக' (Cyclonic Storm) வலுப்பெறக்கூடும்.

மேலும், நவம்பர் 17ஆம் தேதி மாலையில், இது மேற்கு–மத்திய வங்கக்கடல் பகுதியில் 'தீவிர புயலாக' (Severe Cyclonic Storm) வலுவடைய வாய்ப்புள்ளது.


அதன் பிறகு, இது மேலும் வலுவடைந்து, மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து, நவம்பர் 20ஆம் தேதி மதியம், ஆந்திர மாநிலம் நெல்லூர் மற்றும் துனி பகுதிக்கு இடையே ஏனாம் கடற்கரைக்கு அருகே அதி தீவிர புயலாக கரையைக் கடக்கக்கூடும்.

அப்போது காற்றின் வேகம் மணிக்கு 120–130 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 145 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

ஒருபக்கம், சென்னைக்கு புயல் இல்லை என்பது ஆறுதலை அளித்தாலும், போதிய மழை கிடைக்காவிட்டால், கோடைக்காலத்தில் வரும் தண்ணீர் பஞ்சம், அடுத்த ஒரு சில மாதங்களிலேயே தொடங்கிவிடுமே என்ற அச்சம் நிலவி வருகிறது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 16.11.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஐப்பசி மாதம் 30-ம் தேதி

# ஈழத் தமிழர் உரிமை: வாக்குறுதிகள் போதும்; விடிவு வேண்டும்!




போர் முடிவது வேறு; போரால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் முடிவது வேறு. இலங்கைத் தமிழர்களின் இன்றைய வாழ்க்கை இந்த வேறுபாட்டைத்தான் உலகுக்கு உணர்த்துகிறது. போர் முடிந்து பதினேழு ஆண்டுகள் கடந்த பின்னரும், சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ்வதற்கும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலையை அறிந்துகொள்வதற்கும் மக்கள் போராட வேண்டியிருக்கிறது என்றால், அங்கே அமைதி முழுமை பெறவில்லை என்பதே பொருள். வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மனித உரிமை நிலை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ளதாகக் கூறப்படும் அறிக்கையின் விவரங்கள் கவலை அளிக்கின்றன. பெருமளவிலான ராணுவப் பிரசன்னம், நிலங்கள் விடுவிக்கப்படாமை, தொடரும் கண்காணிப்பு, வாழ்வாதாரப் பாதிப்புகள் ஆகியவை தனித்தனிப் பிரச்னைகள் அல்ல. மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்குக் குறுக்கே நிற்கும் தடைகள்.

ஒரு குடும்பத்துக்கு நிலம் என்பது வெறும் சொத்து அல்ல. அது உணவு தரும் வயல்; வருமானம் தரும் தோட்டம்; தலைமுறைகளின் நினைவுகளைச் சுமக்கும் வீடு. அந்த நிலத்தை இழந்தவர்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்குவது தற்காலிக நிவாரணமாக இருக்கலாம். ஆனால், அவர்களுடைய உரிமையை மீட்டுத் தருவதற்கு அது மாற்றாகாது.

நில உரிமைக்கான ஆவணங்கள் இல்லை என்பதைக் காரணமாகக் காட்டி தீர்வைத் தள்ளிப்போடுவதும் நியாயமல்ல. போரில் வீடுகளையும் உடைமைகளையும் இழந்த மக்களிடம் அனைத்து ஆவணங்களும் பாதுகாப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? மாற்றுச் சான்றுகள், பழைய பதிவுகள், உள்ளூர் விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் உரிமையை உறுதிப்படுத்தும் நடைமுறையை உருவாக்க வேண்டியது அரசின் பொறுப்பு. நிர்வாகம் தீர்வுக்கான வாசலாக இருக்க வேண்டுமே தவிர, மறுப்புக்கான சுவராக மாறிவிடக் கூடாது.

அதிபர் அநுரகுமார திசாநாயக அளித்த நில மீட்பு, மாகாண சபைத் தேர்தல், வேலைவாய்ப்பு உள்ளிட்ட வாக்குறுதிகள் தமிழர்களிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தின. அந்த நம்பிக்கைக்கான பதில் அறிவிப்புகளாக மட்டும் இருக்க முடியாது. எந்தெந்த நிலங்கள், எப்போது விடுவிக்கப்படும்? தேர்தலுக்கான கால அட்டவணை என்ன? வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க என்ன நடவடிக்கை? இவற்றுக்குத் தெளிவான பதிலும் வெளிப்படையான செயல்பாடும் தேவை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் இதே உறுதியான அணுகுமுறை அவசியம். உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியும் உரிமையை காலம் கடந்துவிட்டது என்ற காரணத்தால் மறுக்க முடியாது. உண்மை கண்டறியப்படுவதும், பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படுவதும் நல்லிணக்கத்தின் அடித்தளங்கள். நீதியை ஒத்திவைத்துக்கொண்டே நல்லிணக்கத்தைப் பேசுவது பாதிக்கப்பட்டவர்களின் வேதனையை அதிகரிக்கும்.

இந்த விவகாரத்தில் இந்தியாவுக்கும் முக்கியப் பொறுப்பு இருக்கிறது. இலங்கைக்கான பொருளாதார உதவிகளும் வீடமைப்புத் திட்டங்களும் மக்களுக்குப் பயனளிக்கக்கூடியவை. அவற்றுடன், தமிழர்களின் நில உரிமை, பாதுகாப்பு, அரசியல் பங்கேற்பு ஆகியவற்றிலும் அளவிடக்கூடிய முன்னேற்றம் ஏற்பட இந்தியா தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். இருதரப்பு உறவின் முக்கியப் பேச்சுப்பொருளாக இவை இடம்பெற வேண்டும்.

அதேவேளையில், வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட அனைத்துச் சமூகங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மறுகுடியமர்வு, மதச் சுதந்திரம், சமமான வளர்ச்சி ஆகியவற்றையும் உள்ளடக்கிய தீர்வே நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும். ஒருவருடைய உரிமையை மீட்பது மற்றொருவருடைய உரிமையை மறுப்பதாக அமையக் கூடாது.

ஈழத் தமிழர்கள் கேட்பது சலுகையல்ல; குடிமக்களாகத் தங்களுக்கு உரிய வாழ்க்கை. சொந்த மண்ணில் அச்சமின்றி வாழவும், உழைத்துப் பிழைக்கவும், தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பங்கேற்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையை உறுதிசெய்ய வேண்டியது இலங்கை அரசின் கடமை. அதற்கான உறுதியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது இந்தியாவின் பொறுப்பு. இனியும் வாக்குறுதிகள் மட்டும் போதாது. மக்களின் வாழ்க்கையில் மாற்றம் தெரிய வேண்டும்; நீதிக்காகக் காத்திருப்போருக்கு விடிவு பிறக்க வேண்டும்!

**ஆசிரியர்**
**மதுரை மணி**



உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன் குளித்தலை வட்டம், சிவாயம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வட்ட செயல்முறை கிடங்கினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.பிரசன்னா ராமசாமி, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சத்யா, மாவட்ட வருவாய் அலுவலர் தங்கவேல் ஆகியோர் உள்ளனர்.

# சர்ச்சைக்குள்ளாகும் அறநிலையத்துறை நிகழ்வுகள்?

## மீனாட்சி கோயிலில் தியான மண்டபமா?, வழிபாட்டுப் பகுதியா? ஆதாரங்களைச் சமர்ப்பிக்க மனுதாரருக்கு நான்கு வார அவகாசம்!

மதுரை, நவ. 16–

மீனாட்சி அம்மன் கோ யிலில் பக்தர்கள் தியானம் செய்துவ ந்ததாகக் கூறப்படும் மண்டபத்தின் பயன்பாடு தொடர்பான வழக்கில், ஆ வணங்கள் மற்றும் பதில் மனுவைத் தாக்கல் செய்ய மனுதாரருக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நான்கு வார அவகாசம் வழங்கியுள்ளது.




**மனுதாரரின் கோரிக்கை**

மதுரை மாவட்டம் சின்னகொட்டாம்பட்டியைச் சேர்ந்த கருப்பு பொதுநல மனு தாக்கல் செய்தார். மண்டபத்தில் மரம், இரும்புப் பொருட்கள் வைக்கப்பட்டு பூட்டப்பட்டுள்ளதால் பக்தர்கள் தியானம் செய்ய முடியவில்லை என்றும், பொருட்களை அகற்றி அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

**கோயில் நிர்வாகத்தின் விளக்கம்**

கோயில் தரப்பு வழக்கறிஞர் முரளி, கும்பாபிஷேகப் புனரமைப்புப் பணிகளுக்காக அங்கு பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார். தற்போது அந்த இடம் சுத்தப்படுத்தப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அது தனியான தியான மண்டபமல்ல; பக்தர்கள் வழிபடும் பகுதி என்பதே நிர்வாகத்தின் நிலைப்பாடு. இருப்பினும், விரும்பும் பக்தர்கள் அங்கு தியானம் செய்ய அனுமதி க்கப்படுவதாக விளக்கப்பட்டது.

**நீதிமன்றத்தில் நடந்தது என்ன?**

மனுதாரர் வழக்கறிஞர் பெல்கோ எஸ்.மெல்டியூ, நிர்வாகத்தின் விளக்கத்தை மறுத்தார். தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி பி. வேல்முருகன் அமர்வு, தியான மண்டபம் என்பதற்கான ஆதாரங்களைத் தாக்கல் செய்ய அவகாசம் அளித்தது.

எனவே, மண்டபத்தின் தன்மை குறித்த இருத ரப்பு வாத ங்களும் முன் வைக்கப்ப ட்டுள்ள நிலை யில், ஆவண ங்களின் அடிப்ப டையிலான முடிவு இன்னும் எதிர்பார்க்கப்ப டுகிறது.

## உலகப்புகழ் மதுரை மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோவிலில் உபயதாரர்கள் 'திருவிளையாடல்'? –ஆலயம் காப்போம் கண்டனம்!

மதுரை, நவ. 16–

மதுரை ஸ்ரீ மீனாட்சி கோவிலில் சில உபயதாரர்கள் பாத்திரங்கள் மற்றும் பீரோ போன்ற சிறிய பொருட்களை இலவசமாக இத்திருக்கோயிலுக்கு அளித்து விட்டு வருடம் முழுவதும் மாதத்திற்கு 10 முதல் 15 நாட்கள் வரை விருந்தினர் பக்தர்கள் (guest devotees) VIP PASS மூலம் இலவசமாக தரிசனம் ஏற்பாடு நடக்கிறது.




இதனால் இத்திருக்கோவிலின் வருமானம் பாதிக்கப்படுகிறது உள்துறையின் வாரத்திற்கு ஒரு முறை அதிகாரிகள் மாறுவதால் இவர்கள் மாதத்திற்கு எத்தனை முறை VIP pass மூலம் இலவசமாக தரிசனம் ஏற்பாடு செய்தார்கள் என்று அனுமானிக்க முடியவில்லை. ஆகவே இந்த மாதிரி உபயதாரர்கள் VIP PASS க்கு ஒரு அக்கௌண்ட் ஏற்பாடு செய்து கணக்கு வைக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

அதேபோல் காக்கி சீருடை அணிந்த உபயதாரர்கள் மூலம் அமர்த்தப்பட்ட மொத்தம் 12 பணியாளர்கள் -- திருக்கோயில் கடிதம் ந.க. எண்.1343/2024/இ6 நாள் 4.4.2024 கடிதம் பிரகாரம் பணிக்கு அமர்த்திய ஆணை ஏதும் இல்லை. ஆகவே இத்திருக்கோவிலின் பாதுகாப்பு கருதி இந்த காக்கி சீருடை அணிந்த நபர்கள் ஒப்பந்த அடிப்படை மூலம் அல்லது திருக்கோயில் பணியாளர்கள் ஆக நியமனம் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்,வந்தேமாதரம்

இப்படிக்கு
**தினகரன் சுந்தரம்,**
ஒருங்கிணைப்பாளர்,
ஆலயம் காப்போம்,
மதுரை மாவட்டம்.

## மீனாட்சி கோயில் நடராஜர் மண்டபம்: வழிபாடும் தியானமும்–பக்தர்கள் அறிய வேண்டியது என்ன?

**நடராஜர் மண்டபம்: வழிபாடும் தியானமும்**







மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் உள்ள நூற்றுக் கால் மண்டபமும் நடராஜ மூர்த்தி க்காக சின்னப்ப நாயக்கரால் 1526 ல் கட்டப்பட்டது. இங்கே திருவாதிரை அன்றும் ஆனி உத்திரத்தன்றும் உத்சவ மூர்த்தி நடராஜர் க்கு ( பஞ்ச சபை) சிறப்பு அபிஷேகம் நடை பெறும். இந்த மண்டபத்தை தியானம் செய்வதற்கு என்று பிரத்யேகமாக ( Exclusive ) ஆக உள்ள மண்டபம் இல்லை. எல்லா இடத்திலும் தியானம் செய்யலாம். தியானத்திற்கு என்று தனி மண்டபம் ஆலய நிர்மாண விதிகளில் இல்லை. இடைப்பட்ட காலத்தில் ஒரு ஆன்மீக அமைப்பு தியான வகுப்புகள் நடத்தும் சமயத்தில் தியான மண்டபம் என்ற ஒரு flux board வைத்தனர். சைவ ஆலயத்தில் சைவ சமயத்திற்கு உரிய சொற்பொழிவுகள், சித்தாந்த வகுப்புகள் நடத்துவார்கள். அதற்கு அன்னிய மான விஷயங்களை அனுமதிக்க மாட்டார்கள். அப்பொழுதே சில ஆன்மீக அன்பர்கள் இப்படி தனியார் ஆன்மீக அமைப்பிற்காக நிர்வாகம் அனுமதிப்பதற்கு நிர்வாக அலுவலகத்தில் எதிர்ப்பு தெரிவித்தனர். நிர்வாகம் இது ஒரு நல்ல விஷயம் தானே. இதற்கு எதற்கு எதிர்ப்பு என்று நினைத்தனர். கோர்ட்டில் இந்த வழக்கு வரும் வரை அது ஒரு பெரிய மேட்டரோ தவறோ இல்லை என்ற மனோநிலை நிர்வாகத்திற்கு இருந்தது. ஆனால் இன்று அதுவே தேவஸ்தானத்திற்கு தலைவலியாக உள்ளது. "மழைக்கு ஒதுங்கி மனைக்கு வழக்காடுதல்" என்ற பழமொழி இதற்கு பொருந்தும் போல. ஒரு ஆலயத்தில் இதைப் போல பல விஷயங்கள் உள்ளது. பக்தர்கள் வந்து தரிசனம் செய்து பிரசாதம் வாங்கி செல்லும் இடமாகக் தான் இருக்க வேண்டும். இந்த மாதிரி சூழ்நிலை வரும் போது அதற்குரிய அனுபவம் வாய்ந்த அந்த துறையில் ஞானம்உள்ளவரின் ஆலோசனையோடு முடிவு செய்ய முற்பட வேண்டும். வருங்காலத்தில் இது ஒரு படிப்பினையாக அமையும் அல்லது அமைய வேண்டும்.

எல்லாம் இறைவன் திருவருள்.

இப்படிக்கு,
**ஆதி சைவன், S. சங்கரன்,**
வழக்கறிஞர், மதுரை.

## சூரசம்ஹாரத்தில் அரசியல்? ஆதிசேஷன் கண்டனம்!

திருச்செந்தூர் சூரசம்கார நிகழ்வின் பொழுது ( நவம்பர் 15 ல்) வர்ணனை என்று பெயரில் பல அவலமான நிகழ்வுகள் நடந்தேறியது மிகவும் கண்டனத்துக்குரியது.


திருக்கோயில் திருவிழாக்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு நடைபெற வேண்டும் .

எம்பெருமான் முருகனுக்கான அரோஹரா கோஷத்தை பதவி சுகத்துக்காக விஜய்க்கு அரோஹரா , அமைச்சர் ரமேஷுக்கு அரோஹரா என்ற கோஷம் எழுப்பிய பாடகர் வேல்முருகன் செயல் அருவறுக்கத்தக்கது . உடனே அவர் முருக பக்தர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் . இதை விட கொடுமையாக பாடகர் புஷ்பவனம் குப்புசாமி முதல்வர் விஜய் போல முருகன் வேலை எடுத்து அசுரனை வதம் செய்தான் என்று பாடி




வர்ணனை செய்தது கோமாளித்தனத்தின் உச்சம் . மொத்தத்தில் நிகழ்ச்சி பக்தி வாசனை இல்லாமல் சினிமாத்தனமாக இருந்தது. பதவி கொடுத்த அரசியல்வாதிகளை துதி பாடுவது தனிப்பட்ட விழாக்களில் இருக்கலாமே தவிர திருக்கோயில் திருவிழாக்களில் நடப்பது ஏற்புடையது அல்ல . இந்த செயலுக்கு தார்மீக பொறுப்பேற்று அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பகிரங்கமாக பக்தர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் . இனி வரும்காலங்களில் அரசியல் சார்புடைய வர்ணனையாளர்களை தவிர்த்து ஆன்மீகம் சார்ந்த பெரியவர்களை மட்டுமே அழைக்க வேண்டும் . தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் இது போன்ற நிகழ்வுகளை உடனடியாக கண்டிக்க வேண்டும் . சாமானிய பக்தர்களிடம் இது போன்ற நிகழ்வுகள் எதிர்மறை கருத்தினை பதிய வைக்கும் என்பதை முதல்வர் புரிந்து கொள்ள வேண்டும் .

H . **ஆதிசேஷன்**
மாநில பொருளாளர்
ஹிந்து ஆலய பாதுகாப்பு இயக்கம்
மதுரை



# யோகம் இருந்தும் பலனில்லையா?



ஒருவருடைய ஜாதகத்தில் சாதகமான கிரக அமைப்புகளும் வலிமையான யோகங்களும் இருந்தாலும், தவறான செயல்களும் ஆளுமைக் குறைபாடுகளும் அவற்றின் பலனைப் பெறுவதற்குத் தடையாக அமையலாம் என ஜோதிடக் கருத்துகள் தெரிவிக்கின்றன. அதேபோல், கடினமான கிரகநிலைகள் இருந்தாலும் நல்ல நடத்தையும் பொறுப்பான முடிவுகளும் நெருக்கடிகளைச் சமாளிக்க உதவும் எனக் கூறப்படுகிறது.

**கர்மவினையும் விதியும்**

ஜோதிட நம்பிக்கையின்படி, ஜாதகத்தில் அமைந்துள்ள கிரகநிலைகள் ஒருவருடைய கர்மவினைப் பலன்களை அனுபவிப்பதற்கான சூழலைக் குறிக்கின்றன. ஆனால், வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு விதியை மட்டும் குறைகூறிவிட்டு, சொந்தத் தவறுகளையும் தவறான முடிவுகளையும் புறக்கணிக்கக் கூடாது.

சூழ்நிலைகள் எவ்வாறு அமைந்தாலும், அவற்றை ஒருவர் எதிர்கொள்ளும் விதம் வாழ்க்கையின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, தன்னுடைய நடத்தையை மேம்படுத்திக்கொள்வது முக்கியம் என்பதே இக்கருத்தின் மையமாகும்.

**ஜாதகம் காட்டும் வாய்ப்புகள்**

ஜோதிடர்கள் கிரக அமைப்புகள், யோகங்கள், தசாபுத்தி, ராசி, லக்னம் ஆகியவற்றை ஆராய்ந்து பலன் கூறுகின்றனர். அவர்களின் பார்வையில், ஜாதகம் என்பது வாழ்க்கையில் நிகழக்கூடிய சாத்தியங்களைக் காட்டும் வரைபடம். லக்னம் ஒருவருடைய ஆளுமை, அணுகுமுறை உள்ளிட்ட அம்சங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது.

சாதகமான காலங்களில் நல்ல வாய்ப்புகளும் உதவக்கூடிய மனிதர்களின் அறிமுகமும் கிடைக்கலாம். அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதில் தனிநபரின் முயற்சி, பேச்சு, நடத்தை ஆகியவற்றுக்கும் முக்கியப் பங்கு உள்ளது.

**ஆணவம் வாய்ப்புகளைப் பறிக்கலாம்**

பிறரை அவமதிப்பதும், நல்ல ஆலோசனைகளைப் புறக்கணிப்பதும் சாதகமான உறவுகளைச் சிதைக்கக்கூடும். ஆணவத்தால் உதவ முன்வருபவர்களை விலக்கிவிட்டால், கிடைத்த வாய்ப்புகளும் பயனற்றுப் போகலாம். ஜாதகத்தில் நல்ல யோகங்கள் இருப்பதாகக் கூறப்பட்டாலும், அவற்றைப் பயன்படுத்துவதற்கான பணிவும் விவேகமும் தேவை என வலியுறுத்தப்படுகிறது.

இதிகாசங்களில் துரியோதனன், ராவணன் போன்றவர்கள் அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தபோதும், நல்ல அறிவுரைகளை ஏற்காததால் வீழ்ச்சியைச் சந்தித்ததாக எடுத்துக்காட்டப்படுகிறது. திறமையுடன் சரியான அணுகுமுறையும் அவசியம் என்பதையே இந்த உதாரணங்கள் உணர்த்துகின்றன.

**மாற்றம் நடத்தையில் தொடங்கட்டும்**

ஜோதிட மரபில் சடங்குகளுக்கும் பரிகாரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும், பேச்சிலும் செயலிலும் நல்ல மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வது அவசியம். பிறரை மதித்தல், ஆலோசனைகளை ஆராய்ந்து ஏற்றல், தவறுகளைத் திருத்துதல் ஆகியவை வாழ்க்கையை மேம்படுத்த உதவும்.

விதியை மட்டும் நம்பியிருக்காமல், கிடைக்கும் வாய்ப்புகளை நன்னடத்தையுடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்த வேண்டும் என்பதே இக்கட்டுரையின் அடிப்படைக் கருத்தாகும்.



மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் நாமக்கல் மாவட்டம், பரமத்தி வட்டாரம், நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டடத்தினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, முதியோர்களுக்கு ஊன்று கோலினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன்,சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொ.சந்திரசேகர் உட்பட பலர் உள்ளனர்.




தேனி மாவட்டம் சுருளி அருவியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற சுருளி சாரல் திருவிழா இரண்டாம் நாள் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# 60 வயதுக்கு மேல் அசைவம் சாப்பிடலாமா?



வயதைக் கடந்தவர்கள் மீன், முட்டை, சிக்கன் போன்ற அசைவ உணவுகளை முழுமையாகத் தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. சரியான அளவில், ஆரோக்கியமான முறையில் சமைத்துச் சாப்பிடும்போது தேவையான ஊட்டச்சத்துகள் கிடைக்கும் என பெங்களூரு ஆஸ்டர் சிஎம்ஐ மருத்துவமனையின் மருத்துவ ஊட்டச்சத்து மற்றும் உணவியல் துறைத் தலைவர் எட்வினா ராஜ் தெரிவித்துள்ளார்.

**புரதச்சத்து ஏன் அவசியம்?**

வயது அதிகரிக்கும்போது தசைகளின் அடர்த்தியும் வலிமையும் இயற்கையாகக் குறையத் தொடங்குகின்றன. வயது சார்ந்த இந்தத் தசை இழப்பு 'சார்கோபீனியா' எனப்படுகிறது. தசை ஆரோக்கியத்தைப் பராமரிக்கப் போதுமான புரதச்சத்து முக்கியம். மீன், முட்டை, சிக்கன் ஆகியவை உயர்தரப் புரதச்சத்தை வழங்குகின்றன.

**எந்த உணவுகளைத் தேர்ந்தெடுக்கலாம்?**

மீன்களில் புரதச்சத்து நிறைந்துள்ளது. குறிப்பாக, எண்ணெய்ச் சத்துள்ள மீன்களில் ஒமேகா3 கொழுப்பு அமிலங்களும் கிடைக்கின்றன. முட்டையில் புரதத்துடன் வைட்டமின் பி12 உள்ளிட்ட ஊட்டச்சத்துகளும் உள்ளன. சிக்கனின் தோலை நீக்கிச் சமைப்பதன் மூலம் கொழுப்பின் அளவைக் குறைக்கலாம்.

**வாரத்தில் எத்தனை முறை சாப்பிடலாம்?**

உடல்நிலைக்கு ஏற்ப வாரத்தில் பலமுறை மீன், முட்டை அல்லது குறைந்த கொழுப்புள்ள சிக்கனை உணவில் சேர்க்கலாம் என எட்வினா ராஜ் கூறுகிறார். உதாரணமாக, மீனை வாரத்தில் இருமுறை சாப்பிடலாம். முட்டை மற்றும் சிக்கனை சமச்சீரான உணவின் பகுதியாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

தேவையான அளவு, சிறுநீரகச் செயல்பாடு, உடல் உழைப்பு மற்றும் தனிநபரின் ஊட்டச்சத்துத் தேவையைப் பொறுத்து மாறுபடும். அதிக எண்ணெயில் பொரிப்பதற்குப் பதிலாக ஆவியில் வேகவைத்தல், கிரில் செய்தல் அல்லது பேக் செய்தல் போன்ற முறைகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

**யார் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்?**

சிறுநீரக நோய் உள்ளவர்கள் புரதச்சத்தின் அளவை மருத்துவரின் ஆலோசனைப்படி நிர்ணயிக்க வேண்டும். அதிக கொலஸ்ட்ரால் அல்லது இதயப் பிரச்சினைகள் உள்ளவர்கள் கொழுப்பு நிறைந்த மற்றும் பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

கீல்வாதம் அல்லது செரிமானப் பிரச்சினைகள் உள்ளவர்களும் தங்களுக்கேற்ற உணவுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பற்களில் பிரச்சினை உள்ளவர்கள் நன்றாக வேகவைத்த மீன், மென்மையாகச் சமைத்த முட்டை, சிக்கன் கீமா போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம். விழுங்குவதில் சிரமம் இருப்பவர்கள் தங்களுக்குப் பாதுகாப்பான உணவின் தன்மை குறித்து மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.


**அன்றாட உணவுப் பழக்கங்களும் முக்கியம்**

தினசரி உணவில் போதுமான புரதச்சத்துடன் காய்கறிகள், பழங்கள் மற்றும் முழுத் தானியங்களையும் சேர்க்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட இறைச்சி, அதிக எண்ணெயில் பொரித்த உணவுகளைக் குறைத்து, புதிதாகச் சமைத்த உணவுகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

உடல்நிலைக்கு ஏற்ப போதுமான தண்ணீர் குடிப்பதும், நடைப்பயிற்சி மற்றும் தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகளை மேற்கொள்வதும் முக்கியம். வயதை மட்டும் காரணமாகக் கொண்டு அசைவத்தைத் தவிர்க்காமல், தனிப்பட்ட உடல்நிலைக்கு ஏற்ற அளவிலும் முறையிலும் உண்பதே அவசியம் என நிபுணர் வலியுறுத்துகிறார்.

## சினிமா துளிகள்..!

# வசூல் வேட்டையில் ராமாயணா!



நிதீஷ் திவாரி இயக்கத்தில் வெளியான ராமாயணா முதல் பாகத்தின் முதல் 11 நாள் வசூல் விவரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

ரன்பிர் கபூர், சாய் பல்லவி, யஷ், ரவி துபே, சன்னி தியோல் நடிப்பில் இந்தியாவின் மிகப்பெரிய பட்ஜெட் திரைப்படமாக உருவாகிய ராமாயணா படம் தீபாவளி வெளியீடாக நவ. 5ஆம் தேதி திரைக்கு வந்தது. இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. முக்கியமாக கிராஃபிக்ஸ் காட்சிகளுக்கு சிறப்பான வரவேற்பு கிடைத்து வருகின்றன. ரூ. 4000 கோடி பட்ஜெட்டில் உருவான ராமாயணா வெளியான முதல் 8 நாள்களிலேயே ரூ. 1,000 கோடி வசூலித்து சாதனை படைத்தது. இந்த நிலையில், இரண்டாவது வார விடுமுறை நாள்களை கடந்து திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் ராமாயணாவின் முதல் 11 நாள்கள் வசூல் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, உலகம் முழுவதும் முதல் 11 நாள்களில் ரூ. 1,404 கோடி வசூலித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டில் அதிகம் வசூலித்த துரந்தர் 2 திரைப்படம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை திரையரங்குகளில் ரூ. 68.1 கோடி வசூலித்திருந்த நிலையில், அந்த சாதனையை முறியடித்து ராமாயணா திரைப்படம் ரூ. 75 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தாண்டில் அதிகம் வசூலித்த துரந்தர் 2 (ரூ. 1,813 கோடி) படத்தின் வசூலை ராமாயணா முதல் பாகம் முறியடிக்குமா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது.





நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரம், கதிராநல்லூர் ஊராட்சி நத்தமேடு துணை சுகாதார நிலையத்தில் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க.அருண்ராஜ் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் லி.மதுபாலன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.எஸ்.திலீப் (நாமக்கல்), பொ.சந்திரசேகர் (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலையில் ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் சட்டமன்ற தொகுதிக்கான 3 முடிவுற்ற திட்டப்பணிகளை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

# பால் பாக்கெட்டுகளில் புதிய லோகோ கட்டாயம்!

சென்னை, நவ. 16–

பால் மற்றும் பால் பொருட்களின் பாக்கெட்டுகளில் புதிய அடையாளச் சின்னத்தை அச்சிடுவதை இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமான FSSAI கட்டாயமாக்கியுள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இந்த விதிமுறை 2028 ஜூலை 1 முதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




புதிய லோகோ, நீல நிறச் சதுரத்திற்குள் வெள்ளை நிற நீர்த்துளி வடிவில் இருக்கும். பால் மட்டுமின்றி தயிர், பன்னீர் உள்ளிட்ட பால் பொருட்களின் பாக்கெட்டுகளிலும் இந்தச் சின்னம் இடம்பெற வேண்டும். பாக்கெட்டின் அளவுக்கேற்ப லோகோவின் குறைந்தபட்ச அளவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


பால் பொருட்களை நுகர்வோர் எளிதில் அடையாளம் காணவும், அனைத்து நிறுவனங்களின் லேபிள்களிலும் ஒரே சீரான அடையாளத்தை ஏற்படுத்தவும் இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பேக்கேஜிங்கை மாற்றியமைக்க வேண்டும். நுகர்வோர் லோகோவுடன் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி, மூலப்பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து விவரங்களையும் சரிபார்த்து வாங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சிறப்பு 'டெட்' தேர்வு: அறிவுறுத்தல்கள்!

சென்னை, நவ. 16–

தமிழகத்தில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கான சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு (டெட்) டிசம்பர் 20–ஆம் தேதி நடைபெறுகிறது. அக்டோபர் 27–இல் தொடங்கிய இணையவழி விண்ணப்பப் பதிவு நவம்பர் 19–ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. விண்ணப்பதாரர்கள் புதிய பணிச்சான்றிதழ் படிவத்தின் அனைத்து விவரங்களையும் மாற்றமின்றி முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய அலுவலர்களின் சான்றொப்பம் பெற்று பதிவேற்ற வேண்டும். படிவத்தின் விவரங்களை மாற்றினாலோ, கடந்த ஜூலை தேர்வுக்குப் பயன்படுத்திய பழைய படிவத்தைப் பதிவேற்றினாலோ விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என தொடக்கக் கல்வி இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.



முந்தைய தேர்வில் பெயர், தலைப்பெழுத்து, முழுப்பெயர், பிறந்த தேதி, பாலினம், சமூகப் பிரிவு, புகைப்படம் உள்ளிட்டவற்றில் ஏற்பட்ட பிழைகளால் நுழைவுச்சீட்டு, தேர்வு முடிவு மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டன. எனவே, அனைத்து விவரங்களையும் உரிய ஆவணங்களுடன் ஒப்பிட்டுச் சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் நவம்பர் 20 முதல் 22 வரை தேவையான திருத்தங்களைச் செய்து, விவரங்களைச் சரிபார்த்து உறுதிசெய்து மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

# ஓட்டன்சத்திரத்தில் உலக சர்க்கரை நோய் தினத்தை முன்னிட்டு நம்ம மாரத்தான் ஓட்டம்!

ஓட்டன்சத்திரம், நவ. 16–

திண்டுக்கல் மாவட்டம், ஓட்டன்சத்திரத்தில் உலக சர்க்கரை நோய் தினத்தை முன்னிட்டு, ஓட்டன்சத்திரம் ஓட்டம் (ODC Run) சார்பில் நம்ம மாரத்தான் ஓட்டப் போட்டி நடைபெற்றது.



இந்தப் போட்டியில் திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு வயதுடைய ஏராளமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அதிகாலை 5 மணிக்கு தொடங்கிய சுமார் 5 கிலோமீட்டர் தூர மாரத்தான் ஓட்டப் போட்டியை ஒட்டன்சத்திரம் கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், காவல் ஆய்வாளர் லிங்கபாண்டியன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களில் முதல் பரிசை சரவணகுமாரும், இரண்டாம் பரிசை சுகுமாரும், மூன்றாம் பரிசை சரவணன் சின்னச்சாமியும் பெற்றனர். சிறப்புப் பரிசை ராம கிருஷ்ணன் பெற்றார்.


இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக அம்மன் மருத்துவமனை டாக்டர்.சக்திவேல், இந்திய மருத்துவக் கழக ஒட்டன்சத்திரம் கிளைச் செயலாளர் டாக்டர். ஏ.ஆசைத்தம்பி, டாக்டர் சரண்யா சண்முகராஜ், கே.டி. மருத்துவமனை டாக்டர் ரகுராமன், பட்ஸ் பள்ளித் தாளாளர் பொன். கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அப்பல்லோ டயக்னாஸ்டிக்ஸ் ரோகேஷ் மற்றும் எஸ்.கே. ஆர்த்தோ சுரேஷ்குமார் ஆகியோர் ஒருங்கிணைத்திருந்தனர்.


# ஆண்டிபட்டி மற்றும் க.விளக்கு பகுதிகளில் மின்தடை!

தேனி,நவ. 16–

தேனி மின்பகிர்மான வட்டம், பெரியகுளம் கோட்டப் பராமரிப்பிலுள்ள ஆண்டிபட்டி உபமின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக வருகிற (17–11–2026)ஆம் தேதி நாளை 10 மணி முதல் மாலை 2 மணி வரை ஆண்டிபட்டி, டி.சுப்புலாபுரம், இராஜகோபாலன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, ஏத்தக்கோவில், இராஜதானி, பாலக்கோம்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் மின்தடை மேற்கொள்ளப்பட உள்ளது. இதனைத் தொடர்ந்து அதே தினத்தன்று க.விளக்கு உபமின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக பிரதிகாரன்பட்டி, பிஸ்மி நகர், க.விளக்கு, குன்னூர், அரைபட்டிதேவன்பட்டி, அன்னை இந்திரா நகர், ரெங்கசமுத்திரம், முத்துணம்பட்டி, நாச்சியார்புரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதியில் நாளை 10 மணி முதல் மாலை 2 மணி வரை மின்தடை மேற்கொள்ளப்பட உள்ளதாக செயற்பொறியாளர் ப. பாலபூமி தெரிவித்துள்ளார்.




# திருப்பரங்குன்றம் அறங்காவலர் நியமனத்துக்கு எதிர்ப்பு!




திருப்பரங்குன்றம், நவ. 16–

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வரை அறங்காவலராக நியமித்ததற்கு, ஹிந்து அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அது பற்றிய விபரம் வருமாறு:

**சோலைகண்ணன்,**
**மாவட்டத் தலைவர், ஹிந்து மக்கள் கட்சி:**

திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலின் அறங்காவல ராக நியமிக்கப்பட்டுள்ள அழகப்பன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இணை அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர். அவர், தீபத்தூணில் தீபம் ஏற்ற எதிர்ப்பு தெரிவித்து, கோவில் ஆகம விதிகளுக்கு எதிராகச் செயல்பட்டவர். கடந்த காலங்களில் கோவிலுக்கு எதிராகப் பொய் புகார் அனுப்பியவர். கோவிலுக்கு எந்த நன்மையும் செய்யாத, கடவுள் மறுப்பு சிந்தனையுள்ள அவரை அறங்காவலராக நியமித்தது கண்டிக்கத்தக்கது. அறங்காவலராக அழகப்பன் இருப்பது அறநிலையத்துறை சட்டப்படி குற்றம். அறங்காவலர் குழு பதவியேற்பைப் பகலில் நடத்தவில்லை. யாருக்கும் தெரியாமல் தேர்வு செய்து அறிவித்து, இரவில் பதவியேற்பை நடத்தியது ஏன்?

**வேல்முருகன்,**
**மண்டல தலைவர், பா.ஜ.:**

அழகப்பன் குடும்பத்தினர், கோவிலின் நெடுங்குளம் காவல் நாட்டாமை மிராசு மற்றும் இடையர் மிராசு மானியத்தை அனுபவித்து வருகின்றனர். எனவே, அறநிலை யத்துறை சட்டப்படி, அறங்காவலர் நியமனத்திற்கு அவர் தகுதி யற்றவர். 'பசு மடத்தைக் காணவில்லை' எனப் பொய் தகவலைக் கூறி, கலவரத்தை உருவாக்கியவர். அவரை உடனே குழுவில் இருந்து நீக்க வேண்டும்.

**ராமலிங்கம், தமிழக அமைப்புச் செயலாளர், அகில பாரத அனுமன் சேனா:**

அறங்காவலராக நியமிக்கப்பட்டுள்ள அழகப்பன், கடந்த ஆண்டு திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றும் பிரச்னையில் கோவிலுக்கு எதிராகச் செயல்பட்டார். அறங்காவலர் குழுவில் அவர் உறுப்பினராக இருந்தால் கோவிலுக்கு எந்த நன்மையும் கிடைக்காது. அழகப்பனை உடனே தமிழக அரசு நீக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# வேலை வாய்ப்பு

## நேஷனல் இன்சூரன்ஸ் /எஸ்.பி.ஐ. 277 காலியிடங்கள்!

**மொத்தம் 277 வாய்ப்புகள்!**




NICL, SBI: 277 இடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்!

| நிறுவனம் | பணி / பயிற்சி | இடங்கள் | கடைசிநாள் |
|---|---|---|---|
| NICL | ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி | 200 | 18.11.2026 |
| SBI | உதவி மேலாளர் தீயணைப்புப் பொறியாளர் | 17 | 25.11.2026 |
| SBI | மேலாளர், துணை மேலாளர் பாதுகாப்பு | 60 | 25.11.2026 |

விண்ணப்பம் தொடக்கம்: 04.11.2026

பணியிடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கும் முறை: இணையவழி

மின்னஞ்சல் முகவரி: வழங்கப்பட்ட அறிவிப்புகளில் குறிப்பிடப்படவில்லை; மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கும் வசதியும் குறிப்பிடப்படவில்லை.

விண்ணப்பிக்க வேண்டிய இணையதளங்கள்:

NICL: nationalinsurance.nic.co.in

SBI: sbi.bank.in

கல்வித்தகுதி, வயது வரம்பு உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வத் தளங்களின் Recruitment / Careers பகுதியில் சரிபார்த்து விண்ணப்பிக்கவும்.



வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் MBA., சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் P.சந்திரசேகர், நாமகிரிப்பேட்டை கிழக்கு ஒன்றிய கழக அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.

# பரணி பார்க் பள்ளியில் அறிவியல் கண்காட்சி!



கரூர், நவ.16

கரூர் பரணி பார்க் பள்ளியில் சாமியப்பா கவுண்டர் நினைவு அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. விழாவுக்கு பரணி கல்வி குழும தாளாளர் மோகனரங்கன் தலைமை தாங்கி அறிவியல் கண்காட்சி, ஓவியம், நம்மாழ்வார் மூலிகை தோட்டம், பாரம்பரிய உணவு திருவிழா ஆகியவற்றை தொடங்கி வைத்தார். செயலர் பத்மாவதி மோகன ரங்கன், அறங்காவலர் சுபாஷினி அசோக் சங்கர் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி வைத்தனர். இதையடுத்து, முதன்மை முதல்வர் ராமசுப்பிரமணியன் கூறுகையில் இந்த அறிவியல் கண்காட்சியின் மூலம் குழு உணர்வு, தலைமை பண்பு, அறிவியல் மனப்பான்மை, ஆங்கிலத்தில் பேசும் திறன் ஆகியவற்றை வளர்க்கும் வகையில் கண்காட்சி நடைபெற்றது என்றார். இதில் வியப்பூட்டும் அறிவியல் அரங்குகள், பாரம்பரிய உணவு கொண்டாட்டம், 2 ஆயிரம் ஆண்டு பழமையான தமிழில் பெயர் எழுதும் அரங்கு, ஜப்பான் பண்பாடு அரங்கம், மாணவர் ஓவியம் மற்றும் கலைப் பொருட்கள் கண்காட்சி நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை பரணி கல்வி குழும ஆசிரியர்கள் செய்திருந்தனர். இந்த கண்காட்சியில் ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு, அறிவியல் தத்துவங்களை எளிய முறையில் விளக்கும் ஆய்வுகள் உள்ளிட 336 அறிவியல் படைப்புகள் மற்றும் ஆய்வுகள் 1,834 இளம் அறிவியல் விஞ்ஞானிகளால் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## டிசம்பர் முதல் வாரத்தில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்?



புதுடெல்லி, நவ. 16–

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் முதல் வாரத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கூட்டத் தொடரில், தொகுதி மறுசீரமைப்புடன் இணைந்த மகளிர் இடஒதுக்கீடு அமலாக்க மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு முனைப்புடன் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

2029 மக்களவைத் தேர்தலில் இருந்து 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்குவதுடன், அதற்கேற்ப மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 850 வரை அதிகரிக்க வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131–ஆவது திருத்த மசோதா, கடந்த ஏப்ரலில் நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் கொண்டுவரப்பட்டது.

மக்களவையில் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற மொத்த உறுப்பினர்களின் (543) எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளும், வாக்கெடுப்பில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை வாக்குகளும் தேவை. மசோதா மீதான வாக்கெடுப்பில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப் பெறாததால் அது தோல்வியடைந்தது.

இதனிடையே, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20–ஆம் தேதி தொடங்கி ஆக.13 வரை நடைபெற்றது. இதையடுத்து, இரு அவைகளும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன. அதேநேரம், 90 நாள்களுக்கு மேலாகியும் இக்கூட்டத் தொடரை முறைப்படி முடித்துவைக்கும் அறிவிப்பை குடியரசுத் தலைவர் இன்னும் வெளியிடவில்லை. இதனால், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மீண்டும் கொண்டுவரும் வகையில், மழைக்கால கூட்டத் தொடரின் நீட்டிக்கப்பட்ட அமர்வை மத்திய அரசு நடத்தக் கூடும் என்ற ஊகங்கள் நீடிக்கின்றன.

இந்தச் சூழலில், டிசம்பர் முதல் வாரத்தில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கப்பட வாய்ப்புள்ளதாகவும், அதற்கான தேதிகள் குறித்து உயர்நிலை ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

தொகுதி மறுசீரமைப்புடன் இணைந்த மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை மீண்டும் கொண்டுவர மத்திய அரசு முனைப்புக் காட்டிவரும் நிலையில், தற்போதைய மக்களவை பலத்தின் அடிப்படையில் (3 காலியிடங்கள் தவிர்த்து 540) மூன்றில் இரு பங்கு பெரும்பான்மைக்கு 361 எம்.பி.க்களின் ஆதரவு தேவை. ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 320 எம்.பி.க்கள் உள்ளனர். எனவே, எதிர்க்கட்சி எம்.பி.க்களின் ஆதரவும் அவசியமாகும். மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பால் தங்களின் பிரதிநிதித்துவம் குறையும் என்று தென்மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதால், அனைத்து மாநிலங்களிலும் ஒரே சீராக 50 சதவீத தொகுதிகள் அதிகரிப்பு என்ற அம்சத்தை இணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மற்றொருபுறம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிராக இண்டி கூட்டணிக் கட்சிகள் தீவிர எதிர்ப்பை கடைப்பிடித்து வருவதால் கூட்டத் தொடர் சுமுகமாக நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## குற்றவாளிகளின் 'ஹோல்சேல்' கூடாரமாக தவெக! மு.க. ஸ்டாலின்!



சென்னை, நவ. 16–

தவெகவின் கடந்த 6 மாத கால ஆட்சியில், அக்கட்சியின் நிர்வாகிகள் மீது எழுந்துள்ள பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்டவை குறித்து ஆங்கில ஊடகத்தில் கட்டுரை வெளியாகியுள்ளது.

இதில், கள்ளக்குறிச்சி எம்எல்ஏ அருள் விக்னேஷ், மாவட்ட ஆட்சியருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பியதாக எழுந்த குற்றச்சாட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டுரையை எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ள திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருப்பதாவது:

"த.வெ.க. என்பது மற்றுமொரு கட்சியும் அல்ல, மாற்றமும் அல்ல, அது குற்றவாளிகளின் ஹோல்சேல் (Whole–sale) கூடாரம் என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறது இந்த கட்டுரை" என்று குறிப்பிட்டுள்ளார். ஏற்கெனவே, தமிழ்நாட்டில் நிலவும் சட்டம் – ஒழுங்கு பிரச்னைகள், தவெக நிர்வாகிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து முதல்வருக்கு கண்டனம் தெரிவித்த மு.க. ஸ்டாலின், "சட்டம் – ஒழுங்கு ஐசியூ–வில். ஆட்சி நிர்வாகம் கோமாவில். ஒரே நாளில் 17 கொலைகள். குழிதோண்டிப் புதைக்கப்பட்ட சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பதவியின் மாண்பு. பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பியதாக தவெக மீது குற்றச்சாட்டு.

இந்தச் சோப்ளாங்கி ஆட்சியில், குற்றவாளிகளுக்குப் பயமில்லை, காவல்துறையினருக்குப் பாதுகாப்பில்லை, த.வெ.க.வைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குக் கட்டுப்பாடில்லை.

மொத்தத்தில், பகுதிநேர முதலமைச்சராகவும், முழுநேர கன்டென்ட் கிரியேட்டராகவும் இருக்கும் விஜய்க்குப் பொறுப்பே இல்லை" என்று விமர்சித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பறவைக் காய்ச்சல்: கண்காணிப்பில் தமிழகம்!



சென்னை, நவ. 16–

கடந்த சில வாரங்களுக்கு முன்பாக, சென்னை, வண்டலூர் உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் சில பறவைகளிடையே அந்த தொற்று காணப்பட்டதால் பூங்கா மூடப்பட்டது.

இந்த நிலையில், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே உள்ள பண்ணைகளில் கோழிகள் நோய்வாய்ப்பட்டு இறந்தன. மத்திய பிரதேச மாநிலம் போபாலில் உள்ள தேசிய ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், ஹெச்5 என்1 எனப்படும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு அவற்றுக்கு இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, குறிஞ்சிப்பாடி சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள 40,000 பண்ணைக் கோழிகள் பாதுகாப்பாக அழிக்கப்பட்டன. அடுத்த 3 மாதங்களுக்கு கறிக்கோழி வளர்ப்புக்கு தற்காலிகத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. முட்டை உற்பத்தியில் முதன்மையான மாவட்டமாக இருக்கும் நாமக்கல்லிலும் பறவைக் காய்ச்சல் எதிரொலியாக கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழலில், மாநில சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பறவைக் காய்ச்சலுக்குள்ளான உயிரினங்களிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவும். மேலும், பாதிக்கப்பட்ட பறவையிடமிருந்து மற்றவர்களுக்கு, 'வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சு திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை நாடுமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், நோய்ப் பரவல் குறித்து பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் கூறியதாவது: தமிழகத்தில் பறவைக் காய்ச்சலால் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் கண்டறியப்படவில்லை. அதேவேளையில், பறவைகள் உயிரிழப்பது தொடர்ந்து வருவதால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். உயிரிழக்கும் பறவைகளை வெறும் கைகளால் அப்புறப்படுத்தக் கூடாது. அதேபோன்று அறிகுறிகள் இருந்தால், அலட்சியம் காட்டாமல் மருத்துவரை அணுக வேண்டும். கோழிகள்தான் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, கோழி இறைச்சியை சாப்பிடு ம்போது, நன்கு வேக வைக்கப்பட்ட இறைச்சியை உண்பது பாதுகாப்பானது.

மாநிலம் முழுவதும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை முன்னெடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றார் அவர்.

## மதுரை நகைக்கடை கொள்ளை: குற்றவாளி கைது!




மதுரை,நவ. 16–

மதுரை நகைக் கடை கொள்ளை வழக்கில் தலைமறைவாக இருந்த நிஷாந்த் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரி அருகே பதுங்கி இருந்த அவரை 5 நாள் தேடுதல் வேட்டைக்குப் பிறகு நள்ளிரவு 2 மணியளவில் போலீஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். போலீஸார் நெருங்கியதும் பேருந்தின் ஜன்னல் வழியாக குதித்து தப்பியோட முயன்றபோது அவரைக் கைது செய்தனர். இதையடுத்து அதியமான்கோட்டையில் இருந்து நிஷாந்தை மதுரை அழைத்து வருவதற்கு தனிப்படை போலீஸார் விரைந்தனர். மதுரை பழங்காநத்தம் புறவழிச் சாலையில் உள்ளது பிரபல நகைக் கடை. இந்தக் கடையிலிருந்து ஏறத்தாழ 15 கிலோ தங்க நகைகள் கடந்த வியாழக்கிழமை அதிகாலை கொள்ளையடிக்கப்பட்டன.

இதுகுறித்து எஸ்.எஸ். காலனி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மாநகரக் காவல் ஆணையர் எஸ். ராஜேந்திரன் உத்தரவின்பேரில், தெற்கு காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன் தலைமையில் தனிப் படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. விசாரணையில், மதுரை பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த நிஷாந்த் கொள்ளையில் ஈடுபட்டதும், அவருக்கு உடந்தையாக அவரது தந்தை சுரேஷ், நிஷாந்தின் தோழி மீனாட்சி ஆகியோர் செயல்பட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து, மீனாட்சியிடம் நடத்திய விசாரணை, அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 5.5 கிலோ தங்க நகைகளை போலீஸார் மீட்டனர். தொடர்ந்து சுரேஷ், மீனாட்சி ஆகிய இருவரையும் கைது செய்து நீதிபதி சங்கீதா முன் முன்னிலைப்படுத்தினர். இவர்கள் இருவரையும் வருகிற 29–ஆம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதனிடையே, தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளி நிஷாந்தை கைது செய்யவும், மீதமுள்ள நகைகளை மீட்கும் நடவடிக்கைகளையும் போலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த வகையில், ஞாயிற்றுக்கிழமை மாடக்குளம் கண்மாய், இதைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதிகளில் இரண்டாவது நாளாகத் தேடுதல் பணி நடைபெற்றது. நிஷாந்தின் குடும்பத்துக்குச் சொந்தமான விளைநிலங்கள், அந்தப் பகுதியில் உள்ள மரங்கள், கிணறுகள் உள்ளிட்ட இடங்களிலும் நகைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளனவா என போலீஸார் சோதனை நடத்தினர். கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற நகைக் கடையில் தனியார் பாதுகாவலர்கள் மூலம் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நிஷாந்தின் வீட்டைச் சுற்றி மூன்றாவது நாளாக போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளதுடன், அவரது வீட்டிலும் தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர்.

## ஐசிசி தலைவராக மீண்டும் ஜெய் ஷா தேர்வு!



சென்னை, நவ. 16–

மத்திய உள்துறை அமைச்சரும் பாஜகவின் மூத்த தலைவருமான அமித் ஷாவின் மகன் ஜெய் ஷா, கடந்த 2024 டிசம்பரில் ஐசிசி தலைவராகப் பொறுப்பேற்றார். இவரது மூன்று ஆண்டு பதவிக்காலம் அடுத்தாண்டு டிசம்பருடன் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில், இந்தோனேஷியாவில் உள்ள பாலி நகரில் ஐசிசி இயக்குநர்கள் மற்றும் வாரியக் குழு உறுப்பினர்கள் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற ஐசிசி நிர்வாகிகள், ஜெய் ஷாவை மீண்டும் இரண்டாவது முறையாக தலைவராக நியமிக்க ஒருமனதாக தேர்வு செய்துள்ளனர். இதுதொடர்பாக ஐசிசி வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "ஜெய் ஷா தலைமை மீது வாரியத்துக்கு இருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துவதுடன், விளையாட்டின் எதிர்காலத்திற்கான முக்கிய காலகட்டத்தில் ஒரு தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

உலகளாவிய விரிவாக்கம், ரசிகர்களின் வளர்ச்சி மற்றும் வணிக ரீதியான முன்னேற்றம் ஆகியவை இந்த எதிர்கால வியூகத் திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெய் ஷா வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"ஐசிசி என் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு இயக்குநரும் என் மீது தொடர்ந்து வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் ஆதரவுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐசிசி தலைவராகப் பணியாற்றுவது எனக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியம் மற்றும் பொறுப்பாகும். உலகம் முழுவதும் கிரிக்கெட்டின் நலன்களை மேம்படுத்த, நமது உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்ற நான் உறுதியுடன் இருக்கிறேன்.

நமது விளையாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான மற்றும் உற்சாகமான காலகட்டங்களில் நாம் நுழைந்து கொண்டிருக்கிறோம். 2028 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக்கெட் மீண்டும் இடம்பெறுவது, நமது விளையாட்டைப் புதிய பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தவும், புதிய தலைமுறை வீரர்கள் மற்றும் ரசிகர்களை ஊக்குவிக்கவும் ஒரு அற்புதமான வாய்ப்பை வழங்குகிறது.

மக்களை ஒன்றிணைக்கும் ஆற்றலே கிரிக்கெட்டின் மிகப்பெரிய பலம் என்று நான் எப்போதும் நம்புகிறேன். வாரியம் மற்றும் நமது உறுப்பினர்களின் ஆதரவுடன், நமது லட்சியங்களைச் செயலாக மாற்றுவதிலும், நாம் அடையும் முன்னேற்றம் வருங்கால சந்ததியினருக்கு ஒரு நீடித்த பாரம்பரியமாக நிலைத்திருப்பதை உறுதி செய்வதிலும் எங்கள் கவனம் இருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த தேர்வின் மூலம் வருகின்ற 2030 டிசம்பர் வரை ஐசிசி தலைவராக ஜெய் ஷா நீடிப்பார்.

மேலும், ஐசிசி விதிகளின்படி, ஒரு தலைவர் அதிகபட்சமாக தலா மூன்று ஆண்டுகள் கொண்ட இரண்டு பதவிக்காலங்கள் மட்டுமே பணியாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பழனி முருகன் மலைக்கோவிலில் கந்த சஷ்டி திருவிழா; திருக்கல்யாணம் நடைபெற்றது!



பழனி நவம்பர் 16–

பழனி முருகன் மலைக் கோவிலில் இன்று காலை 10:30 மணி அளவில் முருகன் கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு, முருகன் வள்ளி தெய்வானை ஆகியோருக்கு திருக்கல்யாணம் நடைபெற்றது. பழனி முருகன் மலைக்கோவில் நடைபெறும் திருவிழாக்களில் கந்த சஷ்டி திருவிழா சிறப்பானதாகும். இந்த திருவிழா கடந்த 10ஆம் தேதி மலைக்கோயிலில் காப்பு கட்டுடன் தொடங்கியது. நேற்று கந்த சஷ்டி திருவிழாவின் முக்கிய நாள் நிகழ்ச்சியாக சூரசம்ஹாரம் நடைபெற்றது. கிரி வீதியில் முருகப்பெருமான் நான்கு சூரர்களையும், பராசக்தி வேலால் வதம் செய்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பழனி தொகுதி கே ரவி மனோகரன் எம் எல் ஏ, பழனி கோவில் அறங்காவலர் குழு தலைவர் கே எம் சுப்பிரமணியன், அறங்காவலர்கள் சேலம் தனசேகர், பழனி கோவில் நிர்வாக அதிகாரி ஹரிஹரன், துணை ஆணையர் வெங்கடேஷ் திண்டுக்கல் போலீஸ் டிஎஸ்பி ஜெயக்குமார், பழனி போலீஸ் டி எஸ் பி தேவராஜ், பழனி ஆர்டிஓ பிரியங்கா, உள்பட ஏராளமானவர்கள் பங்கேற்றனர். இன்று பழனி முருகன் மலைக் கோவிலில் திருக்கல்யாணம் இன்று நவம்பர் 16ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெற்றது. முன்னதாக காலை 9.30 மணிக்கு மலைக் கோவிலில் முருகன் வள்ளி தெய்வானை ஆகியோருக்கு திருக்கல்யாண நிகழ்ச்சிகளில் தொடங்கியது. இன்று காலை பத்து முப்பது மணி அளவில் முருகன் வள்ளி தெய்வானை ஆகியோருக்கு தனுர் லக்னத்தில் மேளதாளம் முழங்க திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது. திருக்கல்யாணத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். அவர்களுக்கு திருமண விருந்தும் வழங்கப்பட்டது. இதற்கான விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் அதிகாரி ஹரிஹரன், துணை ஆணையர் வெங்கடேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

## நெரிப்பெரிச்சல் பகுதியில் புதிய அதிமுக பகுதி மற்றும் வட்டக் கழக அலுவலகங்கள் திறப்பு விழா!



திருப்பூர், நவ. 16–

திருப்பூர் மாநகர் மாவட்டம், நெரிப்பெரிச்சல் பகுதி கழகத்திற்குட்பட்ட வாவிபாளையம் ரவுண்டானா அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பகுதி கழக அலுவலகம் மற்றும் வட்டக் கழக அலுவலகம் திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு நெரிப்பெரிச்சல் பகுதி கழகச் செயலாளர் திரு. நாச்சிமுத்து மற்றும் 5–வது வட்டக் கழகச் செயலாளர் திரு. கோவிந்தராஜ் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்டக் கழக அவைத்தலைவர். வெ. பழனிசாமி திருப்பூர் வடக்கு தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் அனைத்துலக எம்.ஜி.ஆர் மன்ற துணைச் செயலாளர் . பட்டுலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் . பூலுவபட்டி பாலு, மாமன்ற உறுப்பினர் திருமதி இந்திராணி ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருப்பூர் மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் வேல்குமார் சாமிநாதன் அவர்கள், புதிய பகுதி கழக மற்றும் வட்டக் கழக அலுவலகங்களை ரிப்பன் வெட்டித் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் 4–வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்எப்எஸ் துரை , வட்டக் கழக அவைத்தலைவர் திரு. கண்ணன், 2–வது வட்டக் கழகச் செயலாளர் திரு. செல்வம், 3–வது வட்டக் கழகச் செயலாளர் திரு. இம்மானுவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் திரளாகக் கலந்துகொண்டனர்...

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020